# இந்தியாவை மாற்றுவோம்

## தகுந்த கல்வி மற்றும் தொழில்கல்வி பயிற்சி மூலம் இந்தியாவின் குடிமக்களை சக்திமிக்கவர்கள் ஆக்குவோம்



**இந்தப் புத்தகம் கீழ்க்கண்ட துறைகளுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது**

1. 35 வயதுவரை உள்ள இந்திய இளைஞர்கள் ................ 850 மில்லியன்
2. MSMEகளில் பணிபுரியும் பணியாளர்கள் ........................ 460 மில்லியன்
3. 14 முதல் 55 வயதுள்ள வேலைவாய்ப்பற்றவர்கள் ......... 300 மில்லியன்

*i Watch* இந்தியாவின் 29 மாநிலங்கள் மற்றும் 6 மத்திய ஆட்சிப்பகுதிகளில் **12 மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில்** சென்றடைந்து கொண்டிருக்கிறது.



# இந்தியாவை மாற்றுவோம்

**தகுந்த கல்வி மற்றும் தொழில்கல்வி பயிற்சி மூலம்** இந்தியாவின் குடிமக்களை **சக்திமிக்கவர்கள் ஆக்குவோம்**

கிரிஷன் கன்னா

துணை புரிவோர்

TIMES FOUNDATION
THE TIMES GROUP

Sundaram®
Education Revolution

இந்தியாவில் அச்சிட்டோர்: ஷீதல் பிரின்ட்ஸ், 211, பிரகதி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், டாக்டர் என். எம். ஜோஷி மார்க், லோயர் பரேல் கிழக்கு மும்பை - 400 011.

இந்தியாவில் வெளியிடுவோர் : மேனிஃபெஸ்ட் பப்ளிகேஷன்ஸ், 308 ஒலிம்பஸ், அல்டாமவுன்ட் ரோடு, மும்பை - 400 026, இந்தியா.

பதிப்புரிமை © கிரிஷன் கன்னா

1993ல் இந்தியாவில் முதலில் வெளியிடப்பட்டது.

ISBN 978-81-906621-0-9

இந்தியாவை மாற்றுவோம் *i Watch*னால் 1993ல் முதலில் வெளியிடப்பட்டது மற்றும் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு, இப்போது இந்த பதிப்பு வரை பெரிதாக்கப்பட்டுள்ளது. விவரங்களுக்கு இந்த புத்தகத்தின் பக்கம் 8 பார்க்கவும். மேலும் இந்த புத்தகம் அதாவது அஸாமிஸ், வங்காளம், குஜராத்தி, இந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, மற்றும் உருது என்று 12 இந்திய மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் அச்சிட்டோர்: ஷீதல் பிரின்ட்ஸ், 211, பிரகதி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், டாக்டர் என். எம். ஜோஷி மார்க், லோயர் பரேல் கிழக்கு மும்பை - 400 011.

இந்தியாவில் வெளியிடுவோர் : மேனிஃபெஸ்ட் பப்ளிகேஷன்ஸ், 308 ஒலிம்பஸ், அல்டாமவுன்ட் ரோடு, மும்பை - 400 026, இந்தியா.

**பதிப்புரிமை மற்றும் மறுவெளியீடு**

இந்த புத்தகத்தில் உள்ள அனைத்து பொருளடக்கமும், உரை, வரைபடங்கள், சின்னங்கள், படங்கள், தரவு தொகுப்புகள் போன்றவை *i Watch*-ன் உடைமையாகும் அதேபோல், இதர தகவல் வழங்குனர்களின் உடைமையாகும். இந்த புத்தகத்தை அல்லது அதிலிருந்து எந்த ஒரு பகுதியையும் மறுபிரசுரம் செய்தல், தகவல் மீட்பு அமைப்பில் சேமித்தல், அல்லது பரப்புதல் எந்த ஒரு வடிவத்தில் அல்லது எந்த வழியில் செய்யப்பட்டாலும் - எலக்ட்ரானிக், மெக்கானிக்கல், பிரதி எடுத்தல், பதிவு செய்தல் அல்லது வேறு எப்படியாகிலும் *i Watch*-ன் எழுத்து வடிவ ஒப்புதல் இல்லாமல் மேற்கொள்ளக் கூடாது.

# இந்தியாவை மாற்றுவோம்

## தகுந்த கல்வி மற்றும் தொழில்கல்வி பயிற்சி மூலம் இந்தியாவின் குடிமக்களை சக்திமிக்கவர்கள் ஆக்குவோம்

1. **இது ஒரு புத்தகம் மற்றும் ஒரு பத்திரிகை அல்ல.** சுலபமாக வாசிப்பதற்காக ஒரு பத்திரிகை போல் தோன்றுமாறு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வெகு சிலரே 200 பக்க புத்தகத்தை படிக்க விரும்புகிறார்கள்.

2. இந்த புத்தகமும் இந்த முயற்சியும் இந்தியாவின் இளைஞர்களுக்காக மற்றும் MSMEகளில் பணிபுரியும் 460 மில்லியன் மக்களுக்காக, **இளைஞர்களின் தன்மேம்பாட்டுக்காக** பாடுபடும் தாய்மார்களுக்காக மற்றும் குறிப்பாக **பெண்களுக்கும் பெண் குழந்தைக்கானதாகும்.**

3. இந்த புத்தகத்தின் பொருளடக்கத்தை புரிந்துகொண்டு பாராட்ட, **இந்த முயற்சியின் சாராம்சமாக இந்த பக்கம் போன்று முதலில் பக்கம்** 7 படிக்க வேண்டும்.

4. இந்த புத்தகம் உருவான சரித்திரம், **பக்கம்** 8

5. வற்றாத உற்சாகம், **பக்கம்** 9

6. ஒரு குடிமகனின் முயற்சி, **பக்கம்** 10

7. இந்த புத்தகத்தின் நோக்கம், பக்கம் 10

இந்த புத்தகத்தின் முக்கிய பக்கங்களை படிக்கும் முன்பாக மேற்கண்ட பக்கங்கள் 7, 8, 9 மற்றும் 10 படிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

# உள்ளடக்கம்


உள்ளடக்கம் 2

முன்னுரை 4

வளர்ச்சிக்கான தாரக மந்திரம் 7

இந்த புத்தகம் உருவான சரித்திரம் 8

வற்றாத உற்சாகம் 9

ஒரு குடிமகனின் முயற்சி 10

நாங்கள் உங்களுக்காக என்ன செய்ய முடியும்? 11

*i Watch* கீழ்க்கண்ட பிரச்னைகளுக்காக செயல் புரிகிறது 12

*i Watch* குடிமக்கள் குரல் 14

*i Watch* பற்றி 16

*i Watch* கொள்கைகள், வாழ்க்கைப் பணி, இலட்சியம். 18


## பகுதி 1 ஆட்சி


நீங்கள் அறிந்திராத இந்தியா 19

இந்தியாவை பொருளாதார சக்தி மற்றும் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுதல் 21

பொருளாதாரம் மற்றும் வர்த்தக சீர்திருத்தங்கள் 23

இந்தியாவின் ஆட்சிமுறை & நிர்வாகம் 24

இந்திய நாடு 25

நல்ல ஆட்சிமுறை, இந்தியாவை ஒரு சூப்பர் பவராக ஆக்கும் 26

பூஜ்யம் இலஞ்சம். வேலை இழந்து விடுவோம் என்ற பயம் இருந்தால் மட்டுமே.... 27

உலகத்தரத்திற்கு தேவை கடின உழைப்பு 28

உலகத் தரத்தை அடைவது எப்படி? 31

உலகத்தலைவர்களைப் பார்த்து நாம் கேட்க வேண்டிய 3 கேள்விகள் 33


## பகுதி 2 கல்வி மற்றும் மனித வளம்பாடு


1947க்கு பிறகு 3 நாடுகளின் கதை 34

கல்வியின் முக்கியத்துவம் 35

எந்த இந்திய மொழியையும் 40-60 மணி நேரங்களுக்குள் படிக்க & எழுத கற்றுக் கொள்ளுங்கள் 36

சிறு தொழில் கல்வி & பயிற்சி 37

ESD மற்றும் VET-ன் முக்கியத்துவம். 39

இந்தியாவின் 'கல்வி மேட்ரிக்ஸ்' 41

இந்தியாவை ஒரு சர்வதேச முக்கிய மையமாக ஆக்குதல் 43

இந்தியாவை ஓர் அறிவுக் கரூவூலம் ஆக்குதல் 44

மக்கள் தொகை ''வெடிகுண்டு'' செயலிழக்கச் செய்ய வேண்டும் 47

முரண்பாடுடைய இந்தியா 49

இளைஞர்களுக்கு உரிமை அளிக்க மூன்று முன்மொழிவுகள் 51

இளைஞர்களுக்கான கலந்தாய்வு - நான் யார்? 52

## பகுதி 3 பொருளாதாரம் மற்றும் என்டர்பிரைசஸ்

ஏழை மற்றும் செல்வந்தர் இடையே வேறுபாடு 56
உண்மையான மற்றும் காரியாம்சமான இந்தியா 57
வறுமைக் கோடு - சம்பந்தப்பட்ட புள்ளி விவரம் 58
உலக சந்தைகளுக்காக எவ்வாறு திட்டமிடுவது? 59
MSMEகள் எந்த பொருளாதாரத்திற்கும் முதுகெலும்பு 61
இந்தியா தொழில் துறைக்காக ஒரு சர்வதேச ஹப் ஆக வேண்டும். 63
இந்திய பொருளாதாரத்தின் GDP பகுப்பாய்வு 65
முடிந்தால் என்னைப் பிடியுங்கள் ? 66
யுஎஸ்ஏ, பிரிக், ஐரோப்பா & ஆசியா தேர்ந்த நாடுகளின் பொருளாதார மதிப்பீடு 67

## பகுதி 4 வேலைவாய்ப்பு யுகம்

வளம் குறையாத பொருளாதரத்திற்காக தொழிற் கல்வி 68
மனித வள மேம்பாடு எவ்வாறு வேலையும் வேலையில்லாமையும் பாதிக்கிறது. 69
இந்தியாவின் ‘வேலைவாய்ப்பு மேட்ரிக்ஸ்’ 70
MSMEகள் மூலம் வேலை வாய்ப்பு உற்பத்தி. 72
MSMEகளின் வகைகள்: யுஎஸ் & எஸ்ஏ வகைப்படுத்தல் 73
VET மூலம் வேலைவாய்ப்பு உற்பத்தி 75
VET பாட திட்டங்களின் வகைகள் 76
வேலை வாய்ப்பு உற்பத்திக்காக ஆலோசனைகள் & செயல் திட்டங்கள் 79
தொழில்கல்வி பயிற்சியின் பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட வரையறைகள் 82
சீனா ஒரு கண்ணோட்டம் தொழில்கல்வி & பயிற்சி மற்றும் பொரளாதாரம் 83
ஜெர்மனி ஒரு கண்ணோட்டம்: தொழில்கல்வி & பயிற்சி மற்றும் பொரளாதாரம் 84
அமெரிக்கா ஒரு கண்ணோட்டம் தொழில்கல்வி & பயிற்சி மற்றும் பொரளாதாரம் 85
இந்தியா ஒரு கண்ணோட்டம் தொழில்கல்வி & பயிற்சி மற்றும் பொரளாதாரம் 86
இந்தியாவின் தொழிலாளர் உற்பத்தித்திறன் 87
நம்முடைய மனித மூலதனத்திற்கு பொருத்தமான கல்வி மற்றும் பயற்சி 88
வேளாண்மை: பயன்பெறட்டும் இந்தியா 90

## பொதுவானவை

குறிப்புகள் 91
குறிப்புதவிகள் 92
*i Watch* 2005 முதல் 2014 வரை தேசிய குழுக்களில் 93
இப்புத்தகத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள சுருக்கச் சொற்கள் 94
*i Watch* வெளியீடுகள் 13 மொழிகளில் கிடைக்கின்றன 95
GDP வளர்ச்சி வீதம் ஆண்டு ஒன்றுக்கு 10% முதல் 15% ஆக்கிட GDP செயல் திட்டம் 96
2014-15க்காக திட்டமிடப்பட்ட *i Watch* திட்டங்கள் 97
விளம்பரதாரர் 98
*i Watch* வழங்கும் சிஎஸ்ஆர் திட்டங்கள் 100
ஆசிரியரைப் பற்றி 101
ஊழல் பிரச்சினைகள் குறித்து பரிந்துரைக்கப்படும் ஒரு கட்ட செயல் திட்டம் 102

# முன்னுரை

இந்த வழங்கல் இந்திய குடிமக்களின் நன்மைக்காக வடிவமைக்கப்பட்டது, உதாரணமாக அரசியல்வாதிகள், விவசாயிகள், அதிகாரிகள், தொழில்துறை வல்லுனர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அறிஞர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், ஆலோசகர்கள், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள், இந்திய வம்சாவளிகள், மற்றும் இந்திய இளைஞர்கள்.

**இந்தப் புத்தகம்** ஒரு சாதாரண இதழ் அல்ல. இதை சௌகரியமாக வாசிப்பதற்கு சுலமான இணக்கமான பாணியில் உருவாக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான கட்டுரைகள் ஒன்று அல்லது இரண்டு பக்கங்களை கொண்டுள்ளது. வெகுசில கட்டுரைகள் மட்டுமே மூன்று பக்கங்களை கொண்டதாக உள்ளன.

முற்றிலும் உரை இன்றியமையாததாக இல்லாத நிலையில், தேவையான இடங்களில் உரைவிளக்கத்திற்கு பதிலாக எளிய வரைபடங்கள் துணையாக தரப்பட்டுள்ளன.

இந்த புத்தகத்தில் பொருளடக்கம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் உரையின் பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தலைப்புகளின் இடைத்தொடர்பு பொருத்தமான இடங்களில் சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளன.
**பிரிவு 1 ஆட்சிமுறை** பற்றிய கட்டுரைகளைக் கொண்டுள்ளன.
**பிரிவு 2 கல்வி மற்றும் மனித வள மேம்பாடு** பற்றிய கட்டுரைகளைக் கொண்டுள்ளன.
**பிரிவு 3 பொருளாதாரம், மற்றும் தொழில்** சார்ந்த தேர்ந்த கட்டுரைகளைக் கொண்டுள்ளன.
**பிரிவு 4 வேலைவாய்ப்பு உற்பத்தி** பற்றிய கட்டுரைகளைக் கொண்டுள்ளன.

இந்த புத்தகம் 8வது வகுப்பு வரை மற்றும் அதற்கு மேல் படித்துள்ள ஒவ்வொருவருக்காகவும் ஏற்புடையதாகும்.

இந்தியர்களில் 7% மட்டுமே ஆங்கிலம் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருப்பதால், இந்த புத்தகம் மராத்தி, குஜராத்தி, உருது, இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா, வங்காளம், அஸாமிஸ், மற்றும் பஞ்சாபி, போன்ற முக்கியமான இந்திய மொழிகளிலும் கிடைக்கின்றன.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள பொருள் தற்போது கிடைக்கக்கூடிய தரவுகளைக் கொண்டு கூடுமான வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வாசகர்கள் இந்த பக்கங்களில் காணப்படும் பொருளடக்கத்தை அவை எழுதப்பட்ட உணர்வோடு கருத்தில் கொள்ளுமாறு, இந்திய மக்களின் நன்மைக்காக எண்ணங்களை செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இது போதனா மொழி அல்ல, அல்லது உண்மைகளை உள்ளடக்கிய ஓர் அறிக்கை அல்ல, மக்கள் மேலும் விழிப்புணர்வு பெற்று நாட்டிற்குள் செயல்பட்டு **இந்திய மக்களின் நன்மைக்காக பாடுபட வேண்டும்** என்ற நோக்கத்திற்காக ஆகும்.

ஒவ்வொரு குறிப்பும் 'தனித்திருப்பது'. அவற்றுள் எந்த ஒன்றையும் எந்த நேரத்திலும் படிக்கலாம்.

இந்திய மக்கள் அதிகபட்ச நன்மைகள் அடைய நாம் கவனம் செலுத்த வேண்டிய மிகமுக்கியமான ஐந்து பகுதிகள் என்னவென்று ஒருமுக கேள்வியாக என்னைக் கேட்டால், நான் கல்வி, கல்வி, கல்வி, ஆட்சிமுறை மற்றும் ஆரம்ப ஆரோக்கிய பராமரிப்பு என்று கூறுவேன்.

**முதலாவது 'கல்வி'** என்பது செயல்பாட்டு படிப்பறிவு, மற்றும் மழலையர், ஆரம்ப, மேல்நிலைக் கல்வியைக் குறிக்கிறது. கல்வி உரிமை மசோதா 2005ல் நாடாளுமன்றத்தில் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது, மற்றும் 2009ல் நிறைவேற்றப்பட்டது. நாம் சுதந்திரம் கிடைத்த 63 ஆண்டுகளுக்கு பிறகாவது கல்வியின் தேவையை உணர்ந்து கொண்டமைக்காக கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

**இரண்டாவது 'கல்வி'** என்பது தொழில்கல்வி மற்றும் பயிற்சி (VET) மற்றும் திறமைகளை உருவாக்குவது பற்றியது. தொழில்கல்வி மற்றும் பயிற்சியின் முக்கியத்துவம் இறுதியாக பிரதமர் அளவில் கண்டறியப்பட்டுள்ளது, அவர் 2006ல் சிறப்பு பணிப்பிரிவை உருவாக்கி இந்திய இளைஞர்களுக்கு உரிமையும் பயிற்சியும் அளித்து உற்பத்தி சார்ந்த வேலைவாய்ப்புகளில் ஈடுபடச் செய்து இந்திய இளைஞர்களின் மேம்பாட்டிற்காக மைல் கற்களை உருவாக்க கட்டளை பிரப்பித்துள்ளார்.

11வது திட்ட காலத்தில் **தேசிய திறன் வாரியம்** மற்றும் **தேசிய திறன் வளர்ச்சி கழகம்** 2009ல் அமைக்கப்பட்டது. இந்திய அரசு கூடுதலாக 1500 ITIகள்/ITCகள் மற்றும் 50,000 திறன் மையங்களை 11வது திட்டத்தில் அமைக்க திட்ட மிட்டுள்ளது. தற்போதுள்ள 5,500 ஐடிஐகளை நவீனப்படுத்தும் பணியில் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மூன்றாவது ''கல்வி'' என்பது மருத்துவ, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்து வடிவங்களையும் கட்டுப்பாடின்றி ஆக்குவதற்காக ஆகும். இது மட்டுமே புதுமையை உருவாக்கும், திறமையை உருவாக்கும் மற்றும் நம்மை உலகத்தரமுடையதாக்கும்.

நாம் ஸ்டீல், சிமென்ட், கார்கள், ஸ்கூட்டர்கள் முதலானவற்றில் கட்டுப்பாடு கொண்டிருந்தோம். அதிகரிக்கப்பட்ட திறன் மற்றும் தாராள சந்தைகள் விலை, தரம் மற்றும் கிடைக்கும் தன்மை என்று பல பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைந்தது. கல்வியில் எல்லா வடிவங்களிலும் **'லைசன்ஸ் ராஜ்',** குறிப்பாக மருத்துவ, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்து நிலைகளிலும் கட்டாயமாக நீக்கப்பட வேண்டும்.

கல்வி ஒரு தொழிலாக IT மற்றும் சாஃப்ட்வேர் இவற்றைவிட கிட்டத்தட்ட ஐந்து மடங்கு பெரியது. ஆகவே சாஃப்ட்வேர் மற்றும் ITயைவிட அதிக வேலைவாய்ப்பு உற்பத்திக்கு வாய்ப்பளிக்கிறது

வாசகர் **ஆரம்ப ஆரோக்கியபராமரிப்பு** பகுதியில் தரவு மற்றும் தீர்வுகளுக்காக வேறு இடத்தில் காணவும்.

தீய ஆட்சிமுறையின் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை அளிப்பதன் மூலம் மற்றும் அதன் எதிர்மறை விளைவுகளை எடுத்துக்காட்டி **நல்ல ஆட்சிமுறையின்** சிறப்புத்தன்மை விளக்கப்பட்டுள்ளது. மக்களாட்சியில் வாக்காளர்கள் பொருத்தமான கல்வி பெற்று உரிமை அளிக்கப்படாத வரை நல்ல ஆட்சிமுறையை கொண்டிருப்பது என்பது மிகவும் சிரமமானதாகும். ஆகவே பொருத்தமான கல்வி மீது முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

நம் நாட்டிற்கு நுண் மற்றும் சிறு நடுத்தர தொழில்களின் **(MSMEs)** உண்மையான ஆற்றலை பன்முறை கலந்தாய்வு செய்து விவாதித்து கண்டறிந்து கொள்ள சுதந்திரத்திற்கு பிறகு 59 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. MSMEs பேரிலான மசோதா 2006ல்தான் நிறைவேற்றப்பட்டது. ஏறக்குறைய நம்முடைய நாட்டின் மொத்த உற்பத்தியில் 80% இங்குதான் உள்ளது.

உலகத்தில் 99.7% நிறுவனங்கள், இந்தியா உள்பட MSMEs தான். எந்த ஒரு நாட்டிற்கும் இதுதான் உண்மையான 'டைனமோ' மற்றும் 'இதயத்துடிப்பு' ஆகும். 490 மில்லியன் மக்களின் ஒரு சிறப்பு பணிப்பிரிவு, 6% மட்டும் அமைப்பு சார்ந்த துறையில் உள்ளனர் மற்றும் மீதம் 460 மில்லியன் அல்லது 94% அமைப்புசாரா துறையில் உள்ளனர். MSMEs-ன் மொத்த எண்ணிக்கை 100 மில்லியன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, 80% வேளாண்மை மற்றும் தோட்டப் பயிரிலும், மீதம் 20% தயாரிப்புத் துறையிலும் உள்ளனர்.

வேலைவாய்ப்பு உற்பத்திக்காக தொழில்கல்வி மற்றும் பயிற்சி அல்லது VET மற்றும் MSMEs-ன் முக்கியத்துவம் சிறப்பித்து மற்றும் விளக்கி சொல்லப்பட்டுள்ளது. சமீபத்திய CII - BCG - பேராசிரியர் சி. கே. பிரஹலாத் திட்டம் **இந்தியா@75** பிரகாரம் 2022 வாக்கில் நம் நாட்டிற்கு தேவை 500 மில்லியன் உலகத்தரம் வாய்ந்த திறமையான மக்கள் மற்றும் 200 மில்லியன் உலகத்தரமான பட்டதாரிகள் ஆகும்.

இந்த புத்தகம் உருவான சரித்திரம் மகத்தானது, தயவுசெய்து விவரங்களுக்கு பக்கம் எண் 8 பார்க்கவும்.

**மாற்றம் ஒன்றே நிலையானது.** சிறப்பான அல்லது மோசமான இலக்கு நோக்கி நடை போட வேண்டுமா என்பதை வாசகர்களாகிய நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

கிரிஷன் கன்னா
மும்பை, இந்தியா
ஜனவரி 2014

**பொறுப்புத்துறப்பு**

இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் கடந்த 20 ஆண்டுகள் காலமாக இந்தியாவிலிருந்தும் வெளியிலிருந்தும் பற்பல ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். வழங்கப்பட்டுள்ள தரவுகள் குறித்த துல்லியத்தன்மைக்கு *i Watch* எந்த சட்டரீதியான எந்தப் பொறுப்பையும் ஏற்பதில்லை.
நாங்கள் இந்த புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் முதலீடு அல்லது தொழில் செய்ய பரிந்துரைக்கவில்லை.
பெரும்பாலான தகவல்களின் ஆதாரங்கள் அதேபோல் குறிப்புரைகள் பக்கம் 92 மீது விவரமாக கொடுக்கப்பட்டுள்ளது.
சமீபத்திய தரவு மற்றும் தகவலுக்காக வாசகர்கள் பக்கம் 92ல் கண்டவாறு நடப்பு இணையதளம் மற்றும் கையேடுகளை பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## இந்தியாவின் மாண்புமிகு குடிமக்களே,
பெரியோர்களே, தாய்மார்களே மற்றும் குழந்தைகளே!

ஜனவரி 2014

# உட்படுத்து வளர்ச்சிக்கான தாரக மந்திரம்: *கவனம் கொள்க* மனித வளம் மீது என்பதே!

அன்புடையீர்,

நாங்கள் குடும்ப நிதியத்திலிருந்து 21 ஆண்டுகளுக்கு முன்பு உருவான ஓர் அரசுசாரா அமைப்பு ஆகும். ஆட்சிமுறை, கல்வி, பொருளாதாரம், மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய நான்கு பகுதிகளில் பணியாற்றுகிறோம். **இந்தியாவை மாற்றுவோம்** என்னும் எனது புத்தகத்தை இணையதளம் www.wakeupcall.orgலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நான் 6 ஆண்டு காலம் ஜெர்மனியிலும், ஜப்பானிலும் பணிபுரியும் பாக்கியம் பெற்றேன். இரண்டும் 2வது உலகப்போரில் சீரழிக்கப்பட்டவை. அவர்கள் வசம் தாதுச் செல்வங்களோ அல்லது நிலக்கரி, எரிவாயு அல்லது எண்ணெய் போன்ற சக்திகள் ஏதும் இல்லாதிருந்தும் இன்று உலகத்தில் பொருளாதாரத்தில் 2வது மற்றும் 3வது இடத்தைப் பெற்று தலை நிமிர்ந்து நிற்கிறது. அவை இந்தியாவில் பரப்பளவில் 12% மட்டுமே கொண்டவை. **அவை உயர்தரமான மனித வளத்தை பெற்றிருக்கின்றன.** இதுதான் அவர்களுடைய இரகசியம். இதே கதைதான் சீனா, தென் கொரியா, தாய்வான், ஹாங்காங், சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஜப்பான் போன்ற ஏஷியன் டைகர்ஸ் என்று சொல்லப்படுகின்றவற்றின் கதையும் ஆகும்.

தொழிலில் எனது 31 ஆண்டுகால அனுபவம் மற்றும் பொதுத் துறையில் 20 ஆண்டு காலம் இருந்த அனுபவத்தின் அடிப்படையில் நான் சிலவற்றை தாழ்மையுடன் முன்வைக்க விரும்புகிறேன், அதாவது கடந்த அரசுகள் எத்தனையோ பணிகளை செய்திருக்கின்றன, ஆனால் கீழ்க்கண்ட பிரச்சினைகளை மையப்படுத்தி இன்னும் நிறைய செய்யலாம்.

1. **அனைத்து மத்திய அரசின் இணையதளங்களும் முக்கிய 12 இந்திய மொழிகளில் மாற்றப்பட வேண்டும்.** இந்தியாவில் வட்டார ஊடகங்கள் ஆங்கில ஊடகத்தைவிட 20 மடங்கு பெரியதாகும், அதிகப்படியான மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியும் மற்றும் அரசுடன் இணைந்து செயல்பட முடியும். (இந்தியர்களில் 6% மட்டுமே ஆங்கிலத்தை புரிந்து கொள்ள முடியும். எமது அரசுசாரா அமைப்பு வெளியீடுகளை 12 இந்திய மொழிகளில் வெளியிடுகின்றன). புதுதில்லி, ரஃபி மார்க்கில் உள்ள ஐஎன்எஸ், இந்தியன் நியூஸ்பேப்பர் சொசைடி கையேடு உங்களுக்கு அதிகப்படியான தகவலை அளிக்கலாம். கூகிள், ஒராகிள் மற்றும் மைக்ரோசாஃப்ட் கிட்டத்தட்ட 9 முதல் 15 இந்திய மொழிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்திய அரசியலமைப்பு 22 மொழிகளுக்கு ஆதரவளிக்கிறது.
2. **மழலையர், ஆரம்ப மற்றும் மேல்நிலைக் கல்வி மீது கவனம் செலுத்துதல்.** சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகளுக்கு பிறகும் கிட்டத்தட்ட 65% மக்கள் படிப்பறிவு அற்றவர்களாகவே இருக்கிறார்கள். (இது எமது மதிப்பீடு. தயவுசெய்து UNDPயுடன் கூட சரிபார்த்துக் கொள்ளவும்). மக்கள் எழுதப் படிக்கத் தெரியவில்லை என்றால் ஏழ்மையை குறைப்பது இயலாததாகிவிடும். மனித மூளையின் 90% 6 அல்லது 7 வயதில் வளர்ச்சி அடைகிறது, ஆகவே மழலையர் கல்வி மிகவும் இன்றியமையாததாகும்.
3. **தொழில் திறமை மீது கவனம் செலுத்துதல்.** கிழக்கு ஐரோப்பாவில் இது வகுப்பு 1 முதல் ஆரம்பமாகிறது. இந்தியாவில் குறைந்தது 8வது வகுப்பிலிருந்தாவது அல்லது மேல் நிலைப் பள்ளியிலிருந்தாவது ஆரம்பிக்க வேண்டும். இந்தியர்களில் **கிட்டத்தட்ட 58% சுயதொழில் புரிபவர்கள். ESD கற்போரின் SQ & EQ மேம்படச்செய்கிறது.**
4. **திறமைகள், தொழில்கல்வி பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உற்பத்தி திட்டங்கள் மீது கவனம் செலுத்துதல்.** இந்தியா (மக்கள்தொகை 1210 மில்லியன்) 9,500 VET (தொழில்கல்வி மற்றும் பயிற்சி) மையங்களை கொண்டுள்ளது. சுவிட்சர்லாந்து (மக்கள்தொகை 8 மில்லியன்) 6,000 கொண்டுள்ளது, ஜெர்மனி (மக்கள்தொகை 82 மில்லியன்) 100,000 கொண்டுள்ளது, ஜப்பான் (மக்கள்தொகை 129 மில்லியன்) 150,000 கொண்டுள்ளது, சீனா (மக்கள்தொகை 1350 மில்லியன்) 500,000 கொண்டுள்ளது. 1835ம் ஆண்டு இந்தியாவில் பிரபு மெக்காலே அனைத்து குருகுல மையங்களை மூடிய நாள்முதல் இந்தியாவில் திறமை மற்றும் தொழில் கல்விக்கான உள்கட்டமைப்பு பற்றாக்குறை உடையவர்களாகவே இருந்து வருகிறோம். VET (தொழில்கல்வி மற்றும் பயிற்சி) SQ & EQ மேம்படச்செய்கிறது.
5. **சாம் பிட்ரோடாவின் தேசிய அறிவுக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுதல்.** இந்தியாவில் **உயர் கல்வி, தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் வேளாண்மை** சார்ந்த கல்விக்கான அனைத்து வடிவங்கள் குறித்தும் தேசிய அறிவுக் குழு மிகவும் ஒப்புக்கொள்ளத்தக்க பரிந்துரைகளை அளித்துள்ளது. இந்த பரிந்துரைகள் எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும். இன்று இந்தியாவில் உள்ள கல்லூரிகளில் மற்றும் பல்கலைக்கழகங்களில் எந்த ஒன்றும் உலகத்தில் சிறந்ததென வரிசைப்படுத்தப்பட்டுள்ள முதல் 250ல் இடம் பெறவில்லை. நாம் இப்போது சென்று கொண்டிருக்கும் பாதையை கணக்கில் கொண்டு பார்க்கும்போது அடுத்த 10 ஆண்டுகளில் நாம் உயர்மட்ட 500 பல்கலைக்கழகங்களில் கூட இடம் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை. **போட்டி மற்றும் கட்டுப்பாடின்மை மட்டுமே கல்வி நிறுவனங்களை ஊக்குவித்து புதுமை படைக்கச் செய்யும், ஆய்வு செய்யத் தூண்டும் மற்றும் சர்வதேச நிலைக்கு தரத்தை மேம்படுத்த ஏதுவாக்கும்.** கல்விக் கடவுள் சரசுவதி இப்போது விலங்கிடப்பட்ட நிலையில் உள்ளாள். அவள் விடுவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் முன்னேற்றம் காண இயலும்.
6. **கல்வி தொழில்நுட்பங்கள், தொழில்கல்வி பயிற்சி, மற்றும் தொழில்திறமைகள் குறித்து *i Watch*னால் வழங்கப்பட்ட தீர்வுகள்.** நாங்கள் பள்ளிக் கல்விக்காக குறைந்த செலவில் ஹை-டெக் தொழில்நுட்பத்தை **(ஆண்டு ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.100 வீதம்)**, கல்வி மற்றும் பயிற்சியின் எல்லா வகை வடிவங்களுக்காக தொலைதூரக் கல்விக்காக (ஒரு மணி நேரத்திற்கு மாணவர் **ஒருவருக்கு கிட்டத்தட்ட ரூ.2 வீதம்**), **தொழில் திறமை வளர்ச்சி மற்றும் தொழில்கல்வி பயிற்சிக்கான தீர்வுகளை** வழங்குகிறோம். விவரங்களுக்கு 100 பக்கத்தில் உள்ள எமது சிஎஸ்ஆர் திட்டங்களைப் பார்க்கவும்.

*கிரிஷன் கன்னா*

*நிறுவனர் மற்றும் அறங்காவலர்*

*எம்மை தொடர்பு கொள்ள சிறந்த வழி எமது மின்அஞ்சல் krishan@vsnl.com மும்பை தொடர்பு எண் +91-9821140756*

# பொருத்தமான கல்வி மற்றும் தொழில்கல்வி பயற்சி மூலம்

## பொருளாதார வளர்ச்சியை நிலைபெறச் செய்தல்

இந்தியாவைப் பொறுத்தவரை மேற்கண்ட ஆய்வுக் கருத்து என்றென்றும் தொடர்ந்த வண்ணம் இருக்க வேண்டும்.

கீழ்க்கண்ட இரண்டு எடுத்துக்காட்டுக்கள் **மனித வள மேம்பாடு, பொருத்தமான கல்வி** மற்றும் பொருளாதாரத்தின் நீடித்த வளர்ச்சிக்காக தொழில்கல்வி பயிற்சி மூலம் பெறப்பட **திறமைகள்** வளர்ச்சியின் முக்கியத்துவத்தை வலுபெறச் செய்யும்.

நான் 2007ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தென் கொரியா, கல்வி அமைச்சகத்தினால் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கான தொழில்கல்வி மற்றும் பயிற்சி (VET) மீதான அமர்வுக்கு தலைமை ஏற்க அழைக்கப்பட்டிருந்தேன்.

இது உலகளாவிய மனிதவள மன்றத்தின் ஓர் அங்கமாகும். இதில் 50 நாடுகளிலிருந்து கிட்டத்தட்ட 1,200 கல்வியாளர்கள் கலந்துகொண்டனர். இந்த மன்றத்தில் கலந்துகொண்ட மற்றொரு இந்தியர் ஐஐடி-சென்னையின் இயக்குனரான பேராசிரியர் அனந்த் ஆவார்.

தென் கொரியாவின் துணை பிரதமர் உலகளாவிய மன்றத்தை துவக்கி வைத்தார். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு தென் கொரியாவும் இந்தியர்களைப் போன்றே ஏழையாக இருந்தனர்.

தென் கொரியா ஜப்பான் மற்றும் ஜெர்மனியைப் பார்த்து பாடம் கற்றுக்கொண்டது. 2வது உலகப்போரில் முற்றிலுமாக சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையிலும் தாதுக்கள், நிலக்கரி, அல்லது எரிவாயு, எண்ணெய் வளம் மற்றும் இதர ஹைட்ரோகார்பன்ஸ் பொறுத்தவரை தென் கொரியாவில் உள்ள அளவே (ஆனால் இந்தியாவைப்போல் அல்லாது) இருக்கப் பெற்றவர்கள் வெகு விரைவாக முன்னேறிய விதத்தை கண்டு பாடம் கற்றுக்கொண்டனர்.

தென் கொரியா **தொழில்கல்வி பயிற்சி** மற்றும் **பொருத்தமான கல்வி** மூலம் மட்டுமே திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியும் என்பதை உணர்ந்துகொண்டது.

தென் கொரியா ஒரு துணை பிரதமர் நிலையை உருவாக்கிக்கொண்டது, அவருடைய **முக்கிய பொறுப்பு** மனித வள மேம்பாடு, கல்வி மற்றும் திறமை உருவாக்கலில் நம்பிக்கை கொண்டிருப்பதுதான்.

இன்று, 50 ஆண்டுகளுக்கு பிறகு, ஒரு சராசரி இந்தியர் ஆண்டு ஒன்றுக்கு பெறும் US$ 1,530 வுடன் ஒப்பிடுகையில் தென் கொரியர் ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட பெறும் தொகை US$ 23,823 ஆகும்.

**இந்தியாவில் நமக்காக ஒரு செய்தி. உள்ளதா?**
இரண்டாவது எடுத்துக்காட்டைப் பார்ப்போம், இது நடப்பில் உள்ளது.

நாம் 2022 வாக்கில் ஒரு நாடாக எங்கே இருப்போம்? அல்லது 75வது சுதந்திர ஆண்டில் அல்லது **இந்தியா@75ல்** எங்கே இருப்போம்? இந்திய தொழிற்சாலையின் கூட்டமைப்பு அல்லது CII உலகப் புகழ் பெற்ற மேனேஜ்மென்ட் குரு அமரர் பேராசிரியர் **சி. கே. பிரகலாத்** அவர்களுடன் இணைந்து **இந்தியா@75க்காக** திட்டமிட்டது. CIIன் 74 தேசிய செயற்குழுகளிலிருந்து **கல்வி, திறமைகள் மற்றும் மனித வளம்** பேரிலான குழுக்கள் மற்றும் இளைஞர்கள் மட்டுமே இந்த முயற்சில் ஈடுபாடு கொண்டு முதன்மையாக உழைக்கினறனர்.

**மக்கள் தன்மேம்பாடு பெறுவதனால்** மட்டுமே, குறிப்பாக இந்தியாவின் இளைஞர்கள் கல்வி மற்றும் திறமை உருவாக்கல் மற்றும் தொழில்கல்வி மூலம் மட்டுமே 2022 வாக்கில் நாடு நம்முடைய முக்கிய குறிக்கோள்களை எட்டமுடியும் என்பதில் பேராசிரியர் சி. கே. பிரகலாத் அவர்கள் உறுதியுடன் இருந்தார்.

திட்டம் என்னவெனில் 2022 வாக்கில் வெவ்வேறு துறைகளில் 500 மில்லியன் திறமை வாய்ந்த மக்கள் இருக்க வேண்டும் மற்றும் 200 மில்லியன் உலகத்தரம் வாய்ந்த பட்டதாரிகள் வெவ்வேறு துறைகளில் விளங்க வேண்டும் என்பதாகும்

இந்தியாவில் கல்வி, பொருளாதாரம், ஆட்சிமுறை மற்றும் வேலைவாய்ப்பு உற்பத்தி பற்றிய அதிகமான தகவல் இணையதளம் www.wakeupcall.orgல் கிடைக்கிறது அல்லது பொருத்தமான கல்வி மற்றும் தொழில்கல்வி பயிற்சி மூலம் இந்திய மக்கள் தன்மேம்பாடு பெறச்செய்து **மாற்றுவோம் இந்தியா** என்னும் எங்களுடைய புத்தகத்தில் காணலாம்.

# இந்த புத்தகம் உருவான சரித்திரம்

1993-ல் நாங்கள் ஒரு 4 பக்க சிற்றேடுடன் ஆரம்பித்தோம்

1997-ல் அது 8 பக்கங்களாக வளர்ந்தது, மேலும் அது 10 இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பெற்றது.

1999-ல் அது 16 பக்கங்கள், 2001-ல் 24 பக்கங்கள், 2002-ல் 28 பக்கங்கள், 2004-ல் 32 பக்கங்கள், 2005-ல் 36 பக்கங்கள், 2006-ல் 48 பக்கங்கள், மற்றும் 2007 ஜனவரியில் 56 பக்கங்களாகவும் விரிவாக்கம் கொண்டது.

2008 ஜூலையில் 88 பக்கங்கள், மற்றும் 2009 ஜனவரியில் 92 பக்கங்கள், மற்றும் 2009 அக்டோபரில் 92 பக்கங்கள், என்று மேலும் விரிவாக்கம் கொண்டது.

2011 பிப்ரவரியில் 100 பக்கங்களாக விரிவாக்கம் கொண்டது.

2012 பிப்ரவரி பதிப்பு 102 பக்கங்களாக விரிவாக்கம் கொண்டது. நடப்பு ஜனவரி 2014 பதிப்பு 104 பக்கங்காளாக விரிவாக்கம் கண்டுள்ளது.

**இந்தியாவை மாற்றுவோம்** என்னும் இந்த புத்தகம் ஆங்கிலம் மற்றும் 12 இந்திய மொழிகளில் கிடைக்கின்றன; அதாவது அஸாமிஸ், வங்காளம், குஜராத்தி, இந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, மற்றும் உருது.

எப்போதும் முனைப்பு அதே நான்கு பகுதிகளிலேயே இருந்து வருகிறது:

1. **ஆட்சிமுறை** .................................................. *இந்தியா 1வது*
2. **கல்வி மற்றும் மனித வள மேம்பாடு** .................................. *கல்வி 1வது*
3. **பொருளாதாரம் மற்றும் தொழில்** .................................. *பொருளாதாரம் 1வது*
4. **வேலைவாய்ப்பு உற்பத்தி** .................................................. *வேலைவாய்ப்பு 1வது*

*i Watch* நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது, அதாவது *இந்தியா 1வது, கல்வி 1வது, பொருளாதாரம் 1வது* மற்றும் *பொருளாதாரம் 1வது* என்று மேற்கண்டவாறு ஆகும். முதல் மூன்று தலைப்புகளில் பத்து, பன்னிரண்டு, மற்றும் ஒன்பது கட்டுரைகள் மற்றும் நான்காவது பதினாறு கட்டுரைகள் முறையே, மொத்தம் நாற்பத்தியேழு குறிப்புகள் மற்றும் கூர்நோக்குகள் கொண்டுள்ளது.

வாசகரின் உதவிக்காக, மேற்கண்ட நான்கு வகைகளின் ஒன்று, ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் உரையின் பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நான்கு வகையில் சேராதவகைகளை ‘‘**பொது**’’ என வகைப் படுத்தியுள்ளோம்.



# வற்றாத உற்சாகம்

## நோபல் விருது பெற்றவர் - ரவீந்திரநாத் தாகூர்

**இந்தியா ஒரு தேசமாக உருவாக முடியும் என நன்கு வார்த்தைகளால் வர்ணித்தவர் ரவீந்திரநாத் தாகூர்.**

*எங்கே நடுங்காத நெஞ்சம் உண்டோ அங்கே தலை நிமிர்ந்து நிற்கும்;*

*எங்கே அறிவாற்றல் சுதந்திரமானதோ;*

*எங்கே எல்லைச் சுவர்களால் அகிலம் பிளவு படாதிருக்கின்றதோ;*

*எங்கே வார்த்தைகள் உண்மையின் அடி ஆழத்திலிருந்து வெளிப்படுகின்றதோ;*

*எங்கே நேர்த்தியை நோக்கி கரங்கள் அயராது நீள்கின்றதோ;*

*எங்கே தெளிவான சிந்தனையூற்று மூடப்பழக்க பாலையில் புதையுறவில்லையோ;*

*எங்கே உங்கள் மனம் என்றும் பரந்த எண்ணம் விரிந்த செயலால் வழிகாட்டப்படுகிறதோ-*

*அது சுதந்திர சுவர்க்கத்திற்கு நுழைவாயில் என் தந்தையே, என் நாடு விழித்தெழட்டும்.*

நன்றி: கீதாஞ்சலி செய்யுள் *XXXV*.

# ஒரு குடிமகனின் முயற்சி

ஒரு குடிமகன், ஓர் ஐஐடி பொறியாளரின் முயற்சியினால் ஆரம்பித்தது, பொருத்தமான கல்வி, தொழில்கல்வி பயிற்சி மற்றும் மனித மேம்பாடு பெறுதல் மூலம் மாறிவரும் இந்தியாவிற்காக இயங்குவிசையாக செயல்படுகிறது.

நம் அனைவருக்கும் ஒரு கடமை இருக்கிறது, பலர் அதை உணர்ந்திருக்கிறார்கள் மற்றும் பலர் உணர்ந்திருப்பதில்லை.

எது முக்கியமானது என்றால் நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று ஒரு தெளிவான புரிதல் வேண்டும்.

மற்றவை யாவும் பின் தொடர்ந்துவரும்.

ஓர் அரசியல் சார்பற்ற, மதச் சார்பற்ற, இனச்சார்பற்ற முயற்சி ஒரே நோக்கம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், அப்போதுதான் இந்திய மக்களிடையே பொதிந்திருக்கும் ஆற்றலை புரிந்துகொள்ள முடியும். இந்தப் பணியின் முக்கியத்துவம் தான் நாம் அறிந்திருக்க வில்லை.

இந்தியாவைப் பற்றி நாம் அறிந்திருப்பதைக் காட்டிலும் அறிந்திராதவை அதிகம்.

**இந்த பணி ஒரு விதை மட்டுமே; இதன் வளர்ச்சி பல கைகளில் உள்ளது, அவற்றுள் உங்கள் கையும் ஒன்று.**

# இந்த புத்தகத்தின் நோக்கம்

மிகப்பெரிய சவாலாக இருப்பது 100% செயல்பாட்டு படிப்பறிவு, தொழில்கல்வி மற்றும் பயிற்சி அளிப்பதுதான், மற்றும் மழலையர், ஆரம்ப, மேல்நிலை, உயர், மருத்துவ மற்றும் தொழில்நுட்ப கல்வியின் தற்போதுள்ள உள்கட்டமைப்பு பன்மடங்காக விரிவடைய வேண்டும். மற்றும் இந்தியாவை சர்வதேச அளவிலான ஒரு கல்வி மையமாக உருவாக்க வேண்டும்.

இந்தியா எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக பொருத்தமான கல்வி அளித்து இளைஞர்களை தன்மேம்பாடடையச் செய்ய வேண்டும்.

ஓர் இந்தியரின் சராசரி வயது 26 ஆகும்.

முதன்மையாக முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியது **கல்வி, பெண் குழந்தை மற்றும் பெண்களுக்கான மேம்பாடு, இதுவே வளமான வாழ்வுக்கு வழி!**

# நாங்கள் உங்களுக்காக என்ன செய்ய முடியும்?

அன்புள்ள வாசகர்களே நாங்கள் கீழ்க்கண்ட பகுதிகளில் உங்களுக்கு துணையாக உதவிட முடியும்:

## 1. வெளியீடுகள்

இந்த புத்தகத்துடன் ஆரம்பிக்கவும். தயவுசெய்து **இதர வெளியீடுகளின் பட்டியலுக்கான விவரங்கள்** பக்கம் 95ல் கொடுக்கப்பட்டுள்ளது. 104 பக்க இந்த புத்தகத்தின் அட்டைப்பக்கதின் உள்பக்கத்தில் பார்க்கவும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம், இது **இந்தி, உருது, பஞ்சாபி, அஸாமி, வங்காளம், ஓரியா, குஜராத்தி, மராத்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம்** மற்றும் **மளையாளம்** போன்ற 12 **இந்திய மொழிகளில் கிடைக்கின்றன.** ஆங்கிலம் இந்திய மக்கள் தொகையில் 7% பேர்களால் மட்டுமே புரிந்து கொள்ளப்படுகிறது.

## 2. ஊடாடு பயிலரங்கங்கள்

நாங்கள் பக்கம் 91ல் விவரிக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஊடாடு பயிலரங்கங்களை நடத்துகிறோம். இந்தியாவிற்கான சம்பந்தப்பட்ட **தயாரிப்பு கொள்கை,** இந்தியாவிற்கான **சம்பந்தப்பட்ட கல்வி கொள்கை, உலகமயமாக்கல்** மற்றும் ஆண்டு ஒன்றுக்கு +10% வீதத்தில் இந்தியா எவ்வாறு வளர்ச்சி அடைய முடியும், **நல்ல ஆட்சிமுறை** மற்றும் எவ்வாறு அது இந்திய குடிமக்களுக்கு பயனளிக்கும், ஆண்டு ஒன்றுக்கு 10 மில்லியன் மக்களுக்காக **வேலைவாய்ப்பு உற்பத்தி,** கல்லூரியை விட்டு வெளியே வந்ததும் எவ்வாறு பணம் பண்ணுவது, கல்வி மூலம் **இந்தியாவை மாற்றி அமைத்தல்**, இப்படி பலப்பல.

## 3. ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் இளைஞர்களின் மனப்போக்கில் மாற்றம்

பக்கம் **97ல்** விவரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் 1 மற்றும் 2 பார்க்கவும். திட்டங்கள் விரிவாக அளிக்கப்பட்டுள்ளதோடு அல்லாது இந்தத் திட்டங்களின் நேர்மறை விளைவுகள் கூட நன்கு விளக்கப்பட்டுள்ளன.

## 4. பொருத்தமான தரவுகளை வழங்குதல்

தயவுசெய்து எமது இணையதளம் www.wakeupcall.org பார்க்கவும், அதில் எமது வெளியீடுகள் யாவும் குறிப்பிடப்பட்டுள்ளன. பக்கம் 92ல் குறிப்புதவிகள் யாவும் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் உங்களுக்கு பொருத்தமான பல தரவுகள் நாங்கள் கொடுத்திருப்பதையும் நீங்கள் காணலாம். எளிதாக படித்து புரிந்துகொள்ளும் வகையில் வடிவமைத்துக் கொடுத்திருக்கிறோம். எமது தரவுகள் யாவும் ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகின்றன.

## 5. தொழில் கல்வி மற்றும் பயிற்சி மையங்களை அமைத்தல்

நாங்கள் இந்தியாவிற்குள் பெரிய நிறுவனங்களுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம், அவர்கள் ஆண்டு தோறும் ஒட்டுமொத்தமாக பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு பயிற்சி அளித்துக் கொண்டிருக் கிறார்கள். நாங்கள் அவர்களுடைய **அறிவுப் பங்காளர்களாக இருந்துவருகிறோம்.** தொழில்நுட்ப பயன்பாட்டினால், உண்மையான பயிற்சி மையங்களின் பயன்பாட்டினால், ஒவ்வொரு வட்டாரப் பகுதியிலும் உள்ள தொழில் மற்றும் தொழிற்சாலையுடனும் இத்தயை பயிற்சி மையங்கள் ஊடாடுவதன் பயனாய், உண்மையான பயிற்சிக்காக பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களால் பயிற்சி வழங்கப்படுவதால், மதிப்பீடுகளும் தேர்வுகளும் நடத்தி சன்றிதழ்களுடன் பயிற்சி பெற்ற நபர்களை உருவாக்குவதால், வேலை வாய்ப்பிற்கு முன்பும் பின்பும் ஆலோசனைகள் வழங்கி உதவிவருவதால் இந்தியாவில் எந்த இடத்திலும் எந்த மாவட்டத்திலும் இளைஞர்களுக்கு இடையே எங்களுக்கு நல்ல பெயர் இருந்து வருகிறது. தற்போது நாங்கள் வேளாண்மை, தயாரித்தல், சேவைகள் முதலான பகுதியில் தொழில்கல்வி பயிற்சி வகுப்புகளை நடத்துவதில் முனைப்புடன் இருந்து வருகிறோம். இந்தியாவின் எல்லா பாகங்களிலும் மையங்கள் அமைக்க உதவி வருகிறோம். விவரங்கள் வேண்டுகோள் பேரில் கிடைக்கிறது.

# *i Watch* கீழ்க்கண்ட பிரச்னைகளுக்காக செயல் புரிகிறது

## கல்வி

**ஏனெனில் இதோ சில காரணங்கள்...**

1. மழலையர் பள்ளி முதல் வகுப்பு 10+2க்கு இடையே படிப்பை விட்டு விட்டு விலகுவோர் 87% முதல் 93%.
2. உயர், மருத்துவம் மற்றும் தொழில் நுட்பக் கல்வியில் மற்றும் ஒழுங்குமுறை வளர்ச்சி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி. தரம் மற்றும் திறமையை கட்டுப்படுத்துவதாய் உள்ளது.
3. இந்தியாவிற்குள் இடம் கிடைக்காததாலும் தரமான கல்வி இல்லாததாலும் இந்திய மாணவர்கள் இந்தியாவை விட்டு மேனாட்டு பல்கலைக் கழகங்களுக்கு செல்வோர் ஆண்டு ஒன்றுக்கு செலுத்தும் தொகை சுமார் ரூ. 50,000 கோடி அல்லது US$ 10 முதல் 12 பில்லியன் ஆகும். இந்த நிதி ஆண்டு ஒன்றுக்கு 50 IIMகள் மற்றும் 30 IITகள் உருவாக்க போதுமானது. ஒவ்வொரு ஆண்டும் வெளிநாட்டில் படிப்பதற்காக செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 153,000 என மிதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுள் 50% இரண்டு ஆண்டு முது கலை பட்டப்படிப்பிற்கும் மீதம் 50% நான்டு ஆண்டு பட்டப்படிப்புக்குமாக செல்கிறார்கள்.
4. செயல் முறை படிப்பறிவு அரசின் எண் சுமார் 67% என்பதற்கு எதிராக எதிர்பார்க்கப்படுவது 33%, ஆனால் சீனா 93%க்கு அண்மையில் உள்ளது.
5. திறமைகள் வளர்ச்சியில் உள்ள இடைவெளி. சீனா மற்றும் இதர வளர்ச்சி அடைந்த பாடுகளில் உள்ள தேவையான 7% முதல் 10%க்கு எதிராக எந்த ஒரு கால கட்டத்திலும் அமைப்பு சார்ந்துள்ள துறையில் பணிபுரியும் மக்கள் தொகையின் மதிப்பு 0.50% மட்டுமேயாகும்.
6. இந்தியாவில் 27,000 வெளிநாட்டு மாணவர்கள் உள்ளார்கள் அதே சமயம் ஆஸ்திரேலியாவில் 400,000 வெளிநாட்டு மாணவர்கள் உள்ளார்கள்.
7. சீனாவில் உள்ள 2.5 மில்லியன் பள்ளிகளுக்கு எதிராக இந்தியாவில் 1.7 மில்லியன் பள்ளிகளே உள்ளன.
8. சீனாவில் உள்ள 1,100 பல்கலைக் கழகங்களுக்கு பதிலாக இந்தியாவில் 563 பல்கலைக் கழகங்களே உள்ளன.
9. சீனாவில் உள்ள 500,000க்கு எதிராக இந்தியாவில் 6000 தொழில் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.

## ஆட்சிமுறை

**ஏனெனில் இதோ சில காரணங்கள்**

1. இந்தியாவின் 35 மாநிலங்கள் மற்றும் மத்திய ஆட்சிப்பகுதிகளால் ஒவ்வொரு நாளும் செலவிடப்படும் தொகை ரூ. 3,600 கோடி அல்லது US$ 0.72 பில்லியன் ஆகும். குடிமக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா?
2. இந்தியாவில் அயல் நாட்டு நேரடி முதலீடு (FDI) ஆண்டு ஒன்றுக்கு US$ 121 பில்லியன் என இருக்கும் போது சீனா + ஹாங்காங்கில் ஆண்டு ஒன்றுக்கு US$ 1,920 பில்லியனாக இருப்பது ஏன்?
3. இந்தியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஆண்டு ஒன்றுக்கு 6 மில்லியனாக மட்டுமே இருக்கும் போது சீனாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 80 மில்லியன் ஆகும்.
4. சீனாவின் உலகவர்த்தகம 8.0%க்கு எதிராக இந்தியாவின் பங்கு சுமார் 2.2% ஆகும்.
5. நமது வேளாண்மை உற்பத்தி சீனாவுடன் ஒப்பிடும் போது 40% மட்டுமே.
6. வாழ்நாள் எதிர்பார்ப்பு சீனாவில் 74 ஆண்டுகள் ஆனால் இந்தியாவில் 67 ஆண்டுகள்.
7. மின்சார வாரியங்களிலிருந்து டிரான்ஸ்மிஷன் மற்றும் இதர இழப்புகள் காரணமாக ஏற்படும் மின்சார இழப்பு 25% முதல் 50% வரை வேறு படுகின்றது. ஆனால் இதுவே சீனாவில் 6% முதல் 8% ஆகும்.
8. சீனால் உள்ள க்கு÷ 1000 பில்லியனுக்கு எதிராக இந்தியாவிற்கான அன்னியச் செலாவணி நெருக்கடி நிதி சுமார் க்கு÷ 167 பில்லியன் ஆகும்.
9. இந்தியாவில் ஹெச்ஐவி/எய்ட்ஸ் பாதிப்புக்கு உள்ளாவோர் எண்ணிக்கை சுமார் 5 மில்லியன் ஆகும் ஆனால் சீனாவில் 0.85 மில்லியன்.
10. மிக மோசமான பண்ணை நிர்வாகத்தினால் எல்லா பழங்கள் மற்றும் காய்கறிகளில் 40% சேதமடைகிறது/அழிக்கப்படுகிறது.
11. இந்தியாவில் ஏராளமாக மழை பெய்கிறது. ஆனால் மோசமான நீர்நிலை நிர்வாகத்தினால் வெள்ளம் அல்லது வறட்சி ஏற்படுகிறது.

## பொருளாதாரம்

**ஏனெனில் இதோ சில காரணங்கள்.**

1. தற்போதுள்ள உலக பொருளாதார எல்லைக்குள் இந்திய நிறுவனங்கள் களமிறங்கி செயல்பட தொழிலாளர் சட்டங்கள் அனுமதிப்பதில்தலை.
2. தொழிலாளர் மிகுதியான தொழில்களை விட மூலதனம் மிகுதியான தொழில்களிலேயே நமது நாட்டம் இருப்பதனால் வேலை வாய்ப்பு உற்பத்தி பாதிப்படைகிறது.
3. உலக GDPயில் 2.6% மட்டுமே இந்தியாவில் உள்ளது. வாங்கு சக்தி மிகக் குறைவாக உள்ளது ஆனால் தேவை மிக அதிகமாக உள்ளது. காரணம்

<1 பில்லியன் = 1000 மில்லியன்> <1 மில்லியன் = 10 லட்சம்> <1 கோடி = 100 லட்சம் = 10 மில்லியன்> <1 US$ = ரூ 60 (தோராயமாக)>

17%-ன் மக்கள் தொகை அதிகம் என்பதே, ஏற்றுமதி மட்டுமே இதற்கான பதில். கடந்த 59 ஆண்டுகளில் இதுவரை போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

4. 1,210 மில்லியன் மக்களுக்காக உள்கட்டமைப்பு மிகவும் பற்றாக் குறையுடைதாய் இருக்கிறது. வாய்ப்பேச்சு அதிகமாகவும் செயல் வீச்சு மிகக் குறை வாகவும் உள்ளது.

5. இந்தியாவின் உலக வர்த்தகத்திற்காக வாங்கும் திறன் சமமதிபு, (PPP)-ன் அனுகூலத்தின் பலனை இந்தியா பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்.

6. உலக பொருளாதாரத்தில் 5% மட்டுமே ஐடி - மென் பொருளை சார்ந்துள்ளது. உலக பொருளாதாரத்தில் மீத முள்ள 95% குறித்து இந்தியா முயற்சி எடுக்க வேண்டும்.

7. MSMEகளின் அனுகூலம் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளப்படவில்லை. தற்போதைய வரையறை கிழக்கு ஐரோப்பா. அமெரிக்கா, ஜப்பான், சீனா முதலான வற்றில் உள்ள உலக தரக்குறிப்பிடுகளுக்கு ஏற்ப அமைந்திருக்க வில்லை. உலகத்தில் உள்ள அனைத்து நிறுவனங்களில் 99.7% MSMEகளாக இருக்கும் நிலையில் இது இந்தியாவிற்கு பெரும் பாதகமான ஒன்றாகும். இந்தியாவின் GDP-ல் 7% மட்டுமே SSIகள் ஆகும் அதே நேரத்தில் MSMEகள் 85% முதல் 90%க்கு ஒட்டி இருக்க வேண்டும். தொழில் அமைச்சகத்திற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் பொருளாதார அமைச்சகத்தின் பால் திசை திரும்ப வேண்டும்.

# வேலைவாய்ப்பு உற்பத்தி

**நாங்கள் இந்த பிரச்சினை குறித்து பாடுபடுவது ஏனெனில்...**

1. இந்தியாவில் 43 மில்லியன் பேர்கள் வேலையற்றவர்கள் என்று பதிவு செய்துள்ளார்கள் மற்றும் கிட்டத்தட்ட மற்றுமொரு 260 மில்லியன் பேர் தகுதிக்கு குறைவான வேலையை செய்பவர்களாக அல்லது வேலையற்றவர்கள் 18 முதல் 50 வயதுக்குட்பட்டவர்கள் பதிவு செய்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்.

2. ஒரு சீனருடைய சராசரி வயது 34, மற்றும் ஓர் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அல்லது ஜப்பானியருடைய சராசரி வயது 40 முதல் 45 என்று இருப்பதுடன் ஒப்பிடும்போது, ஓர் இந்தியரின் சராசரி வயது 26 ஆகும். இந்தியா மிக்க இளமையான நாடாக விளங்குகிறது.

3. சீனா உள்நாட்டு மொத்த உற்பத்தியின் (GDP) கிட்டத்தட்ட 2.5% தொழில்கல்வி மற்றும் பயிற்சிக்காக (VET) 3000 தொழில்களுக்காக 500,000 தொழில்கல்வி மற்றும் பயிற்சி மையங்களில் செலவிடுகிறது. ஆனால் இந்தியா உள்நாட்டு மொத்த உற்பத்தியின் (GDP) வெறும் 0.1% மட்டுமே தொழில்கல்வி மற்றும் பயிற்சிக்காக (VET) 400 தொழில்களுக்காக 8,500 தொழில்கல்வி மற்றும் பயிற்சி மையங்களில் செலவிடுகிறது. உண்மையில் தொழில்கல்வி மற்றும் பயிற்சிக்காக ஆகும் செலவு அதிகம், ஆனால் விவரங்கள் கிடைக்கவில்லை.

4. சாதாரண கல்வியைப் போல் அல்லாது, தொழில்கல்வி நேரடியாக வேலைவாய்ப்பு மற்றும் சொத்து உருவாக்கலுடன், அறிவு மேம்பாடுடன் சம்பந்தப்பட்டது. தொழில்கல்வியினால் ஒரு சாதாரண குடிமகனுக்கு கிடைக்கும் பலன்கள், திறமையான பயிற்சிபெற்ற மனித சக்தியை பயன்படுத்திக்கொள்ளும் நிறுவனங்களுக்கு கிடைக்கும் பலன்கள், உலக அளவில் போட்டிகள் நிறைந்த உலகில் ஒரு நாட்டிற்கு கிடைக்கும் பலன்கள், என்று பார்க்கும்போது 15 வயதிற்கு மேற்பட்ட கிட்டத்தட்ட 80% இளைஞர்கள் தொழில் கல்வியையே தேர்வு செய்வார்கள் மற்றும் சாதாரண கல்லூரி பட்டப் படிப்புகளான B.A., B.Sc. அல்லது B.Com.க்கு செல்ல மாட்டார்கள்.

5. தொழில்கல்வி மற்றும் பயிற்சியை உபயோகித்து எதிர்கால இந்தியர்களால் உலக சந்தைக்கு தேவையான இளம் திறமைவாய்ந்த மனித சக்தியை வழங்க மக்கள்தொகை சாதகமாக உள்ளது.

6. தற்போதுள்ள 490 மில்லியன் கொண்ட பணிப்படையை அமைப்பு சார்ந்த துறைகளில் 30 மில்லியன் என்றும், அமைப்பு சாராத துறைகளில் 460 மில்லியன் என்றும் பிரிக்கலாம். நம்முன் உள்ள மிகப் பெரிய சவால் அமைப்பு சாராத துறைகளில் உள்ள 460 மில்லியன் பேர்களுக்கு உலகத்தரமான தொழில்கல்வி மற்றும் பயிற்சி வழங்குவதுதான்.

7. MSMEகளில் பெரும்பாலானவை அமைப்பு சாராத துறைகளில் உள்ளன. MSMEகள்தான் பொருளாதாரத்தின் உண்மையான 'டைனமோ' ஆகும். தொழில்கல்வி மற்றும் பயிற்சி கொண்டு MSMEகளை புறாவால் அமைப்பாக மாற்றும்போது இளைஞர்களுக்கு மிகப்பெரிய மையத்தை உருவாக்கவும் உலகத்தில் பயிற்சிமிக்க மனித சக்தியை உருவாக்கவும் நல்வாய்ப்பாக அமையும். இது ஒரு பொருளாதார சக்தியாக இந்தியாவை முன்னோக்கி அழைத்துச் செல்ல உந்துசக்தியாக செயல்படும்.

8. மக்கள்தொகை 8 மில்லியனே கொண்ட நாடுகளான சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்ட்ரியா போன்றவை 5000 தொழில்கல்வி மற்றும் பயிற்சி (VET) மையங்களை கொண்டுள்ளன. இந்த நாடுகளின் நிலங்களில் தாதுச் செல்வங்கள் அல்லது மன்சக்திகளும் ஏதும் இல்லை, ஆனால் உயர் தரமான மனித வளங்களைக் கொண்டு இந்தியாவுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட உள்நாட்டு மொத்த உற்பத்தியின் (GDP) 33% மற்றும் 23% முறையே கொண்டுள்ளன.

9. தற்போதைய 'பயில்பணியாளர் சட்டம்' நாட்டின் தற்போதைய தேவைக்கு ஏற்ப இல்லை. அது முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும், அதனால் பணிப்படையின் கிட்டத்தட்ட 10% பயில்பணியாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு அதே நேரத்தில் பணிபுரிபவர்களாகவும் விளங்க முடியும்.

<1 பில்லியன் = 1000 மில்லியன்> <1 மில்லியன் = 10 லட்சம்> <1 கோடி = 100 லட்சம் = 10 மில்லியன்> <1 US$ = ரூ 60 (தோராயமாக)>

# *i Watch* குடிமக்கள் குரல்

கடந்த பத்து ஆண்டுகளில் இந்திய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து கிடைத்த மடல்கள் மற்றும் செய்தித் தொடர்புகள் அடிப்படையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த செய்தித் தொடர்புகளில் சிலவற்றை தேர்ந்தெடுத்து ஒரு வரலாற்று பதிவேடாக தொகுக்கப்பட்டுள்ளது. மும்பையில் எமது அலுவலகத்தில் ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளது. மின்னூட்டங்களில் சில பின்வரும் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், *i Watch*-னால் மேற்கொள்ளப்பட்ட திட்ட திறமை அடிப்படையில் மனப்போக்கு மாறி இருப்பது குறித்தும் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் செயல் திட்டங்கள் துவக்கப்பட்டு உள்ளன என்பதறிந்து நாங்கள் பெரு மகிழ்வடைகிறோம்.

• என்னுடைய கார்ப்பொரேட் நிர்வாகத்தின் கொள்கைகளை உருவாக்கும்போது உங்கள் கட்டுரையிலிருந்து சேகரித்த சில சிந்தனைகளை பயன்படுத்திக் கொள்ள முடியும் என நான் நம்புகிறேன்.
***N.R. நாராயண மூர்த்தி, தலைவர் & முதன்மை ஆலோசகர், இன்ஃபோஸிஸ்***

• குடிமக்களின் நன்மைக்காக *i Watch* ஆற்றிவரும் நற்பணியை சேம்பர் பாராட்டுகிறது.
***P.N. மோக்ரே, செகரட்டரி ஜெனரல், இந்தியன் மர்செண்டஸ் சேம்பர்***

• தான் ஈடுபட்டிருக்கும் வேலையில் அல்லது வாழ்க்கையில் எங்கிருப்பினும் புதுமை படைக்கவும் மாற்றியமைக்கவும் *i Watch*-ன் குறிக்கோளே கிருஷன் கன்னா அவர்களின் குறிக்கோளாக இருந்து வருகிறது.
***டாக்டர். P.S. ராணா, தலைவர் & நிர்வாக இயக்குனர், ஹூட்கோ***

• நாங்கள் 500 க்கும் மேற்பட்ட NGOக்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம் மற்றும் *i Watch* ஓர் ஒப்பற்ற மற்றும் புதுமையான NGO ஆக கண்டறிந்துள்ளோம் என்பதை சொல்லியாக வேண்டும்.
***வினய் சோமானி, மேனேஜிங் டிரஸ்டி, Karmayog.com***

• இந்திய மக்களின் அதிகபட்ச நன்மைக்கு *i Watch*-ன் கருத்துக்களும் ஆலோசனைகளும் கொள்கைகளை உருவாக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.
***அனுபம் மிட்டல், தலைவர் & CEO, பீப்பிள் குரூப்***

• மாறிவரும் இந்தியாவிற்காக இத்தகைய ஒரு தூய்மையான திட்டத்தைக் கொண்ட *i Watch* போன்று எந்த NGO வையும் நான் இதுவரை கேட்டதில்லை.
***மேஜர் ஜெனரல் D.N. குரானா, டைரக்டர் ஜெனரல், ஆல் இந்தியா மேனேஜ்மெண்ட் அசோஸியேஷன்***

• கல்விச்சீர்திருத்தங்கள் மற்றும் மாறிவரும் இந்தியாவிற்கு உண்மையான திட்டங்களை நிறைவேற்றும் பல்வேறு அக்கறை கொண்டவர்களுடன் உதவி மற்றும் நெட்வொர்க் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி, தீர்வுகளுக்கான ஆலோசனைகள் வழங்கி, செயல் திட்டங்கள் தீட்டும் *i Watch*-ன் முயற்சியை நான் உண்மையிலேயே மனமார பாராட்டுகிறேன்.
***சுஷ்மா பெர்லியா, பிரசிடெண்ட, எஜூகேஷன் புரோமோஷன் சொசைட்டி ஃபார் இந்தியா***

• இந்தியாவின் உயர்வான நிலையான வளர்ச்சி அடைய அவர்கள் ஒரு திட்டம் அமைத்துள்ளார்கள். இதற்காக ஒரு உடன்பாடு உருவாக்க மற்றும் திட்ட மாற்றங்களை ஏற்படுத்த அவர்கள் உழைத்து வருகிறார்கள். நீண்ட கால பலனை அடைய இது உண்மையில் ஒப்பற்றவிதம் வடிமைக்கப்பட்ட செயல்திட்டம் ஆகும்.
***ராஜீவ் குமார், தலைமை பொருளாதார நிபுணர், CII***

• இந்திய மக்கள் நன்மை அடைய நல்ல ஆட்சிமுறையின் முக்கியத்துவத்தையும் தேவையையும் மற்றும் தேவைப்படும் பொருத்தமான திட்ட மாற்றங்களையும் குறிப்பிட்டு மக்கள் புரிந்து கொள்ளும் படி செய்யும் ஓர் அற்புதமான பணியை *i Watch* செய்து வருகிறது.
***டாக்டர். B.P. தாகா, செகரட்டரி ஜெனரல், PHDCC&I***

• நான் ஒரு கல்வியாளராக மற்றும் ஒரு மனித வள மேம்பாட்டு ஆலோசகராக மிகவும் புதுமையான தொழிற்கல்வியின் 3000 துறைகளில் இளைஞர்களில் 95% பேர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான *i Watch* திட்டத்தை நான் தீவிரமாக நம்புகிறேன்
***பேராசிரியர் ருஷிகுமார்பாண்டியா, இன்டர் நேஷனல் மேனேஜ்மெண்ட் குரு***

• மாறிவரும் இந்தியா என்று தலைப்பிட்ட உங்கள் புத்தகத்தை நான் ஆர்வமுடன் படித்தேன் மற்றும் இதில் அடங்கியுள்ள மிக பயனுள்ள ஆய்வுகளுக்காகவும் ஆலோசனைகளுக்காகவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். எழுப்பப்பட்டுள்ள பிரச்னைகளும் சொல்லப் பட்டுள்ள பரிந்துரைகளும் அளவற்ற மதிப்பு மிக்கவை என்பதில் எனக்கு ஒரு சிறிதும் ஐயம் இல்லை.
***B.N. யுகாந்தர், திட்டக் குழு உறுப்பினர்***

• நல்ல ஆட்சிமுறை குறித்து உங்களுடைய சிற்றேடு, மாறிவரும் இந்தியாவில் கண்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்ற உங்களுடன் விரிவாக கலந்துரையாட நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்
***M. தாமோதரன், தலைவர் & நிர்வாக இயக்குனர், IDBI***

• *i Watch* ஆற்றியுள்ள நல்ல பணியை நான் அறிவேன். நல்ல ஆட்சிமுறை, பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து உங்களுடைய கருத்துக்களை நான் குறித்து வைத்துக் கொண்டுள்ளேன்

***M. வெங்கையா நாய்டு, தலைவர், பா.ஜ.க.***

• தயவுசெய்து நற்பணி தொடரட்டும்.
***டாக்டர் R. நடராஜன், தலைவர் அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழு***

• இந்தியாவை உயர்த்த உங்களுடைய முழுமையான திட்டம் மற்றும் உங்களுடைய முயற்சிகளைக் கண்டு நான் மனநிறைவடைகிறேன்.
***பாபு கல்ஃபான், யுஎஸ்ஏ-ல் உள்ள NRI***

• *i Watch* அமைக்கப் பட்டுள்ளதற்கான கண்ணோட்டம் சிறந்த ஆட்சிமுறைக்காக உண்மையிலேயே காலத்தே எடுக்கப்பட்ட மிக நல்ல முயற்சியாகும். உங்களுடைய தர்ம ஸ்தாபனத்துடன் இணைப்பு வைத்துக் கொள்ளுவதில் நாங்கள் பெருமகிழ்வடைகிறோம்.
***தீபாங்கர் சான்வால்கே, நிர்வாக இயக்குனர் KPMG***

• முதற்கண் உங்களுடைய அனைத்து படைப்புகளுக்கு நான் உங்களுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்ளுகிறேன் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி மீதான எமது பணி புரிதலில் நீங்கள் ஆர்வம் காட்டியுள்ளதை நான் பெருமையும் மகிழ்ச்சியும்அடைகிறேன். நான் ஆற்றலை உணர்கிறேன்.
***பேராசிரியர் ரூபா ஷா, துணை வேந்தர், S.N.D.T. பெண்கள் பல்கலைக் கழகம்***

• ஐசி சென்டர் ஃபார் கவர்னன்ஸ்-ன் நிறுவன உறுப்பினரான உங்களை நாங்கள் வரவேற்கிறோம். உங்களுடைய முக்கிய பிரச்சனைகளின் தேர்வு மற்றும் வரையறுக்கப்பட்ட செயல் திட்டங்கள் கண்டு சென்டரின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மிகவும் மனநிறைவு கொண்டுள்ளார்கள்.
***பிரபாத் குமார், முன்னாள் கேபினெட் செகரட்டரி & பிரசிடென்ட் ஐசி சென்டர் ஃபார் கவர்னன்ஸ்***

• எமது தலைமை செயலாளருடன் தங்களுடைய கலந்துரையாடல் குறித்து தில்லி செயலகத்தில் உள்ள NCT-ன் அரசின் கிட்டத்தட்ட 450 பேர்கள் அடங்கிய அனைத்து மூத்த மற்றும் நடுத்தர மட்ட அளவில் உள்ள அதிகாரிகளுக்கு நல்ல ஆட்சிமுறை & திறமையான நிர்வாகம் குறித்து கலந்துரையாடல் சந்திப்பை நடத்தினால் நாங்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைவோம்.
***பிரகாஷ் குமார், AR & IT செகரட்டரி, NCT-ன் அரசு***

• **உலக எகனாமிக்ஸ் ஃபோரம் மற்றும் CII**-யினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இன்டராக்டிவ் ஒர்க்ஷாப்பில் ''இந்தியா மற்றும் உலகம் 2025'' எனும் தலைப்பில் கருத்து மற்றும் ஆலோசனை வழங்க நிபுணர் குழுவின் ஓர் அங்கமாக *i Watch* அழைக்கப்படுகிறது.
***கான்ஃபெடரேஷன் ஆஃப் இந்தியா இண்டஸ்ட்ரி***

• தாங்கள் ஆற்றியுள்ள நற்பணிக்கு தயவு செய்து எனது பாராட்டுக்களை ஏற்றுக் கொள்ளவும். உங்கள் பணி சிறந்து விளங்க எனது வாழ்த்துக்களை கூற இந்த நல்ல வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்கிறேன். எந்த பகுதிகளில் நமக்கு பெரும் கவனிப்பு தேவையோ அவை பற்றிய விழிப்புணர்வு அதே போன்று பிரச்சனைகளை விளக்கிடவும் உங்களுடைய வெளியீடுகள் உதவும் என நான் நம்புகிறேன்.
***M.V. ராஜசேகரன், மினிஸ்டர் ஆஃப் ஸ்டேட் ஃபார் பிளானிங், பிளானிங் கமிஷன்***

• NRI-சிவில் சொசைடி பார்ட்னர்ஷிப் கருத்தரங்கில் பங்கேற்று வாதப் பிரதி வாதங்களில் கலந்து கொண்டு வழிகாட்டுவதற்கு தங்களுடைய மேலான நேரத்தை ஒதுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.
***டாக்டர் அபித் ஹுசேன், சேர்மன், குரூப் ஃபார் எகனாமிக் & சோஷியல் ஸ்டடீஸ்***

• உங்களுடைய ஆதரவுக்கு நான் நன்றி பாராட்டுகிறேன். நிறுவனம் வலுவானதாகவும் துடிப்புள்ளதாகவும் வளர எங்களுக்கு பெரிதும் உதவியது.
***பத்மினி சோமானி, டைரக்டர், சலாம் பாம்பே ஃபவுண்டேஷன்***

• உங்களுடைய வெளியீடு படிப்பதற்கு ஆர்வமூட்டுவதாய் உள்ளது. உங்களுடைய அணுகுமுறையின் எளிமையையும் செயல் முறைப்பயிற்சியையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்.
***K.L. சுக், சேர்மன், எமிரிடஸ் ஐடிசி லிட்.***

• *i Watch* ஓர் அற்பதமான பணியை செய்து கொண்டிருக்கிறது மற்றும் நீங்கள் செய்துவரும் ஆய்வுப் பணி எங்களுடைய இயக்கத்திற்கு ஏராளமான உள்ளிடுகளை வழங்கும்.
***சுதேஷ் K. அக்கர்வால், செகரட்டரி ஜெனரல், ஆல் இந்தியன்ஸ் ஃபவுண்டேஷன்***

• இது உண்மையிலேயே மிகவும் சிரமமான காரியம் என்பதை ஒத்துக் கொள்கிறேன் மற்றும் ஏராளமான புள்ளி விவரங்களையும் தரவுகளையும் தாங்கள் திரட்டியுள்ளீர்கள். என்னுடைய வரையறையுடன் கூடிய தகுதி கொண்டு முடிந்த மட்டும் எல்லா அரங்குகளிலும் உங்களுடைய தரவுகளை முன்னிலைப் படுத்த முயற்சிப்பேன்.
***P.N. ராய், சேர்மன், இண்டோ-அஸாஹி கிளாஸ் லிட்.***

• எமது சமூக கலாச்சார-பொருளாதார அமைப்புகளில் எங்கும் வியாபித்து பின்னிப் பிணைத்திருக்கும் வியாதிகளைப் பட்டிய லிட்டிருக்கும் தங்களது முயற்சி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.
***R.S. அகர்வால், ஜாயின்ட் சேர்மன், இனாமி குரூப் ஆப் கம்பனீஸ்.***

• நான் உங்களுடைய இந்தியாவின் ஆட்சி முறை மற்றும் நிர்வாகம் பற்றிய கட்டுரையை ஆய்ந்து

படித்தேன். மனதில் ஆழமாய் பதியும் படியாக உள்ளது மேலும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் ஏற்பட்டது. ஒவ்வொருவரையும் நிமிர்ந்து உட்கார்ந்து சிந்திக்கத் தூண்டும் அளவுக்கு சக்திவாய்ந்தது. சரியான இடத்தில் அடி பதிந்துள்ளது. இந்தியாவை எது வருத்துகிறது என்று மிக துல்லியமாக சுட்டிக் காட்டியுள்ளீர்கள்.
***பிரகாஷ் அல்மெய்டா, டைரக்டர், இன்ஸ்டிட்யூட் ஃபார் ஸ்டடி ஆஃப் எகனாமிக் இஷ்யூஸ்***

• இந்த குறிப்பை பெறுபவர்கள் அனைவரையும் நன்கு சிந்திக்கத் தூண்டும் மற்றும் அந்த சிந்தனை மூலம் சிலர் நீங்கள் வரைந்து காட்டியிருக்கும் நோக்கத்தை மெய்ப்பிக்க செயல் திட்டத்தில் இறங்கு வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.
***N. விட்டல், சென்ட்ரல் விஜிலன்ஸ் கமிஷன், CVC***

• உங்களுடைய அறிவு உணர்வு மிகவும் சிறப்பானது, எண்ணங்கள் சுயமானவை, மற்றும் சில புள்ளி விவரங்கள் மனதை சிந்திக்கத் தூண்டச் செய்பவை. அகில இந்திய ஊடகம் மூலம் உங்களுடைய எண்ணங்கள் பரவலாக சென்றடைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.
***H. N. தஸ்தூர், நிர்வாக இயக்குனர், பாரதிய வித்யா பவன்***

• விழிப்புணர்வு ஏற்படும் போது செயலாக்கம் உண்டாகும் மற்றும் இந்த புனித போராட்டத்தில் நானும் மற்றும் பல இந்தியர்களும் உங்களுக்கு துணையிருப்போம். தொடரட்டும் நும் பணி.
***சுஷில் குப்தா, பாஸ்ட் டிஸ்ட்ரிக்ட் கவர்னர் ரோடரி டிஸ்ட்ரிக்ட் 3010***

• உங்களுடைய மடலில் குறிப்பிடப்பட்டுள்ள படி ஓர் அம்ச திட்டம் அனுசரித்திட என்னுடைய சக்திக்குட் பட்ட வகையில் எது வேண்டுமானாலும் நான் தொடர்ந்து செய்ய உங்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்.
***ஜியார்ஜ் பெர்னான்டஸ், பாதுகாப்பு அமைச்சர், இந்திய அரசு***

• உங்களுடைய மதிப்பு மிக்க அனுபவத்துடன் எங்களுக்கு உதவியிருப்பது குறித்து நாங்கள் மிகவும் பெருமைப் படுகிறோம்
***ஏர் காமடார் அம்ரித்லால், எக்ஸிக்யூடிவ் டைரக்டர், இந்தியன் சொசைடி ஃபார் டிரெய்னிங் & டெவலப்மென்ட்***

• குறிப்பில் வெளிப்படுத்தியுள்ள உங்கள் கருத்துக்களை நான் பாராட்டுகிறேன் மற்றும் சரியான திசையில் சமுதாயம் மேம்பாடடைய உதவும். அதிக கருத்துக்களையும் நடைமுறையில் சாத்தியமான பயிற்சிகளையும் நாங்கள் வரவேற்கிறோம்.
***சுரேஷ் பிரபு, நாடாளுமன்ற உறுப்பினர், மக்கள் அவை***

# *i Watch* பற்றி

## *i Watch* என்பது என்ன ?

*i Watch* என்பது ''மாறிவரும் இந்தியா'' விற்கான ஒரு தேசிய குடிமக்கள் இயக்கம். *'i'* என்பது இந்தியாவை, இந்தியர்களை, உங்களையும் என்னையும் குறிக்கும். *"Watch'* என்பது இந்த நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம். வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக குடிமக்களுக்கு எடுத்துரைக்கின்றோம்.

*'i'* சிறியதாக இருக்கிறது காரணம் நமது குருக்கள் எப்போதும் நமக்கு சொல்லி இருப்பது பணிவின் மூலம் தான் உண்மையை உணர்ந்தறிய முடியும் என்பதேயாகும். **மனித வள மேம்பாடு, ஆட்சிமுறை, பொருளாதாரம் மற்றும் தொழில்துறை மற்றும் அவைகளின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சம்பந்தம் குறித்து** நாங்கள் முக்கியத்துவம் அளிக்கிறோம்.

*i Watch* என்பது இந்தியாவில் மும்பை மாநகரில் தலைமை அலுவலகம் அமையப் பெற்று இயங்கிவரும் ஒரு பதிவு செய்யப்பெற்ற அமைப்பு ஆகும்.

இந்திய நிறுவனங்கள் மற்றும் குடிமக்களுக்காக *i Watch* க்கு அளிக்கப்படும் நன்கொடைகள் வருமான வரிச் சலுகை 80G க்கு தகுதியுடையது.

ஜனவரி 2009ல் பெற்ற வெளிநாட்டு நன்கொடைகளுக்கு FCRA ஒப்புதல் வழங்கியுள்ளது.

## இந்தியாவை மாற்றியமைக்க நாம் எவ்வாறு திட்டமிடுகிறோம் ?

*i Watch* மூன்று நிலைகளில் செயல் புரிகிறது.

1. **விழிப்புணர்வை உருவாக்குதல்.**
   இந்தியாவை ஒரு அறிவியல் பொருளாதாரமிக்க தாக உருவாக்குதல், நீங்கள் அறிந்திராத இந்தியா, மற்றும் இந்தியாவிற்கான செயல் திட்டம், போன்ற குறிப்புகள் விழிப்புணர்வு உருவாக்குதலின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

2. **தீர்வுகள் மற்றும் செயல் திட்டங்களுக்கான கருத்து தெரிவித்தல்.**
   இது எமது இணைய தளம், கலந்துரையாடும் பயிற்சிக் கூடங்கள் மற்றும் எமது 104 பக்க **இந்தியாவை மாற்றுவோம்** எனும் தலைப்பு கொண்ட புத்தகத்தின் மூலம் சாதிக்க முடிகிறது.

3. **உண்மையாக செயல் முறைப் படுத்துதல்.**
   நாங்கள் இந்த நோக்கத்திற்காக, அரசு, பொது மக்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (NGO's) உடன் துணை நின்று இணைப்பை ஏற்படுத்துகிறோம்.

## *i Watch* என்ன சாதனை புரிந்துள்ளது ?

1992ம் ஆண்டில் நாங்கள் மாறிவரும் இந்தியாவின் பயணத்தை துவக்கிய போது நாம் எதை முன்னிலைப்படுத்தி செயல்பட வேண்டும் என்ற குறிப்பு ஒன்றும் பெற்றிருக்க வில்லை.

மாறிவரும் இந்தியாவிற்காக முன்னிலைப் படுத்தப் படவேண்டிய பகுதிகள் என சில அடிப்படை முடிவுக்கு வருவதற்கு ஆராய்ச்சி மற்றும் பயணம் என கிட்டத்தட்ட 4 ஆண்டு காலம் எங்களுக்கு ஆயிற்று.

இதனை 1996ல் தான் எங்களால் அடைய முடிந்தது. உண்மையான பணி 1997ம் ஆண்டு ஆரம்பம் ஆனது. முடிவாக முன்னிலைப் படுத்தப்பட வேண்டியது கீழ்க்கண்ட நான்கு முக்கிய பகுதிகள் என்று தீர்மானமானது:-

1. **மனித வள மேம்பாடு, கல்வி மற்றும் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கல்**
2. **இந்தியாவின் ஆட்சிமுறை மற்றும் நிர்வாகம்**
3. SSI, MSME பற்றிய **கொள்கை மாற்றங்கள்** மற்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர் சட்டங்கள்.
4. **பொருளாதாரம் மற்றும் தொழில்துறை,** உ.ம். ஏற்றுமதி மற்றும் சில்லரை, மொத்த விற்பனை, தயாரித்தல், பயணம் மற்றும் சுற்றுலா, ஆரோக்கிய பராமரிப்பு, உள்கட்டமைப்பு மற்றும் வேளாண்மை போன்ற இதர துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

*i Watch* நாங்கள் கீழ்க்கண்டவற்றின் பயன் பாட்டினால் முடிவு எடுக்கும் மக்கள் தொகுதியினரின் பெரும் பான்மையோரின் மனப் போக்கை மாற்ற முடிந்ததன் காரணத்தினால் *i Watch* அனைத்து நான்கு பகுதிகளிலும் சிறிது வெற்றி அடைந்துள்ளது:-

1. கலந்துரையாடல் கொண்ட பயிற்சி கூடங்கள், கருத்தரங்குகள் மற்றும் கட்டுரைகள்.
2. *இந்தியாவை ஓர் அறிவியல் பொருளாதாரமிக்கதாக உருவாக்குதல், நீங்கள் அறிந்திராத இந்தியா மற்றும் இந்தியாவிற்கான செயல் திட்டம் பற்றிய வெளியீடுகள்.*
3. 104 பக்க புத்தகம், *மாறிவரும் இந்தியா*
4. இணைய தளம் www.wakeupcall.org
5. MHRD-ன் தேசிய குழுமங்கள், திட்டக்குழு, சேம்பர் ஆஃப் காமர்ஸ், CII, FICCI, தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் முதலியவற்றில் பங்கேற்றல்.

CII, FICCI, ASSOCHAM, PHDCC&I, IMC, MEDC, BCC&I-ன் உறுப்பினராக மற்றும் IBA, RBI, மற்றும் MOF உடன் கலந்துரையாடல்களின் பலனாக, நாங்கள்

# வாழ்க்கையில் நிலையானது மாற்றம் மட்டுமே

